# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 121 | புதன்கிழமை Wednesday | 29.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# மேகதாது விவகாரம்: பிரதமர் மோடி உடனடியாக தலையிட வேண்டும்

## முதலமைச்சர் விஜய் வலியுறுத்தல்




சென்னை: கர்நாடக அரசின் மேகதாது அணைத் திட்டத்திற்கு எந்தவிதமான சட்டப்பூர்வ அல்லது நிர்வாக அனுமதியும் மத்திய அரசு வழங்கக்கூடாது என்று பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் இன்று (ஜூலை 28) கடிதம் எழுதியுள்ளார்.

கர்நாடக அரசி' மேகதாது அணைத் திட்டத்திற்கு எந்தவிதமான சட்டப்பூர்வ அல்லது நிர்வாக அனுமதியும் வழங்கக் கூடாது என்றும், மாநிலங்களவையில் மத்திய ஜல் சக்தி இணை அமைச்சர் அளித்தபதிலைதிரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி, முதலமைச்சர் விஜய், பிரதமர் நரேந்திர மோடிக்கு இன்று (ஜூலை 28) கடிதம் எழுதியுள்ளார்.

"அந்தக் கடிதத்தில், "மாநிலங்களவையில் ஜல் சக்தி இணை அமைச்சர், 2018 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பில், காவிரி ஆற்றின் குறுக்கே அணை அமைப்பதற்கு கர்நாடகா, கீழ்நீர் பாயும் மாநிலங்களின் (Lower Riparian States) ஒப்புதலை பெற வேண்டும்என்று வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை என பதிலளித்திருப்பது ஏமாற்றமளிப்பதாக உள்ளது. அமைச்சரின் இந்தப் பதில், தற்போது நடைமுறையில் உள்ள சட்டநிலையையும், உச்ச நீதிமன்றத்தின் ஏற்கனவே வழங்கிய தீர்ப்புகளையும் கருத்தில் கொள்ளாமல் அளிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, கர்நாடகா–ஆந்திரப்பிரதேசம் இடையிலான அலமட்டி அணை வழக்கில் 2000 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அரசியல் சாசன அமர்வு தீர்ப்பில், கீழ்நீர் பாயும் அனைத்து மாநிலங்களின் ஒப்புதலும், மத்திய அரசின் அனுமதியும் இல்லாமல் கர்நாடகா அணையின் உயரத்தை அதிகரிக்கவோ அல்லது புதிய அணை அமைக்கவோ அனுமதிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் தெளிவாகக் கூறியுள்ளது.

மேலும், காவிரி நீர்த் தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பை2018ஆம்ஆண்டு உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளதாகவும், அந்தத் தீர்ப்பின் படி ஒவ்வொரு மாநிலமும் தன்எல்லைக்குள்உள்ள நீரை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் பெற்றிருந்தாலும், அது தீர்ப்பாயத்தின் உத்தரவுகளுக்கு முரணாக இருக்கக் கூடாது.

கேரளாவின் பாம்பார் நீர்மின் திட்டம் தொடர்பான வழக்கில், வெறும் 0.1 டி.எம்.சி. நீர் பயன்பாட்டுக்குக் கூட, தமிழ்நாடு மற்றும் கேரளா இணைந்து நீர் திறப்பதற்கான அட்டவணையை முடிவு செய்ய வேண்டும் என்று காவிரி தீர்ப்பாயம் உத்தரவிட்டது. இதன் மூலம், ஆண்டுதோறும் பகிரப்படும் நீரின் அளவு மட்டுமின்றி, நீர் திறக்கும் முறை மற்றும் கால அட்டவணைக்கும் தீர்ப்பாயம் மிகுந்த முக்கியத்துவம் அளித்திருப்பது தெளிவாகிறது.

அதேபோல், காவிரி தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பில் இடம்பெற்றுள்ள பிரிவு XI–ன்படி, மேல்நீர் பாயும் மாநிலங்கள், கீழ்நீர் பாயும் மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட நீர் விநியோகத்தை பாதிக்கும் எந்த நடவடிக்கையையும், பரஸ்பர ஒப்புதல் மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆலோசனை இல்லாமல் மேற்கொள்ள முடியாது என்றும், பிரிவு XX–ன்படி தீர்ப்பாயத்தின் விதிமுறைகளில் மாற்றம் செய்ய வேண்டுமெனில், அனைத்து தரப்பினரின் ஒப்புதலும் அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேகதாது அணைத் திட்டத்தை ஒரு சாதாரண பொறியியல் திட்டமாக மட்டும் கருத முடியாது. கர்நாடக அரசு 2019 ஆம் ஆண்டு சமர்ப்பித்த மேகதாது அணை விரிவான திட்ட அறிக்கையை (DPR), காவிரி தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்புக்கும், நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களுக்கும் ஏற்ப திருத்தம் செய்யுமாறு மத்திய நீர்வள ஆணையம் திருப்பி அனுப்பியிருந்தார்.

இதையடுத்து, மத்திய அரசு உடனடியாக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாநிலங்களவையில், மேகதாது திட்டம் தொடர்பாக மத்திய ஜல் சக்தி இணை அமைச்சர் அளித்தபதிலைதிரும்பப் பெற வேண்டும். காவிரி நீர்த் தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்புக்கும், உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கும் முழுமையாக இணங்கும் என்பது நிரூபிக்கப்படும் வரை, மேகதாது அணைத் திட்டத்திற்கு எந்தவிதமான சட்டப்பூர்வ அல்லது நிர்வாகஅனுமதியும்வழங்கக் கூடாது.

கீழ்நீர் பாயும் மாநிலங்களின் நீர் உரிமையும், நிர்ணயிக்கப்பட்ட நீர் திறப்பும் முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் மேகதாது திட்டம் குறித்து எந்தவிதமான பரிசீலனையும் மேற்கொள்ள வேண்டுமானாலும், தொழில்நுட்ப மற்றும் சட்ட ரீதியான முழுமையான ஆய்வுக்குப் பிறகே, கீழ்நீர் பாயும் அனைத்து மாநிலங்களின் கருத்துகளையும் கருத்தில் கொண்டு மட்டுமே முடிவு எடுக்க வேண்டும்.

காவிரி நதி என்பது வெறும் நீர் ஆதாரம் மட்டுமல்ல; தென்னிந்தியாவின் கோடிக்கணக்கான விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் வாழ்வாதாரம். காவிரி தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பையும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும்பாதுகாப்பது, மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் பிரச்சினைகளில் அரசியல் சாசனத்தின் மீதான நம்பிக்கையை நிலைநிறுத்துவது மிகவும் அவசியம்.

நீதி, கூட்டாட்சி தத்துவம் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகள் முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும்என்றஉயர்ந்த நோக்கத்தின் அடிப்படையில், இந்த விவகாரத்தில்மத்தியஅரசு உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதத்தில் முதலமைச்சர் விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்.

# “ஆட்சியை காப்பாற்ற தமிழக உரிமையை முதலமைச்சர் விஜய் அடகு வைத்துள்ளார்” எதிர்கட்சித்தலைவர் உதயநிதி பேச்சு



சென்னை: "டெல்லி எஜமானர்களை பகைத்துக் கொள்ளாமலும், ஆட்சிக் கட்டிலைக் காப்பாற்ற காங்கிரஸுக்கு எதிராக பேசாமலும், தமிழக உரிமையை முதல்வர் விஜய் அடகு வைத்துள்ளார்" எனசட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில், "மேகேதாட்டு அணை கட்ட தமிழகத்தின் அனுமதி கர்நாடகாவுக்குத் தேவை இல்லை என்ற ஒன்றிய இணை அமைச்சரின் பதில், காவிரி விவகாரத்தில் தமிழக உரிமையை கேள்விக்குறியாக்கி இருக்கிறது. டெல்லி எஜமானர்களை பகைத்துக் கொள்ளாமலும், ஆட்சிக் கட்டிலைக் காப்பாற்ற காங்கிரஸுக்கு எதிராக பேசாமலும், தமிழகத்தின் உரிமையை அடகு வைத்துள்ளார் முதல்வர். இந்தபிரச்சினையில், தமிழக அரசியல் கட்சிகள் ஓரணியில் சென்று ஒன்றியஅரசிடம்மேகேதாட்டுவுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டுமென சட்டப்பேரவையில் பேசி இருந்தேன்.

கர்நாடகாவில் பட வசூல் பாதிக்கும் என்ற பயத்தில், இந்த சோபா மாடல்முதல்வர்,எதிர்க்கட்சிகள் சொன்னதையும் கேட்கவில்லை. விவசாயிகளின் கோரிக்கையையும் ஏற்கவில்லை. இனியும் காலம் தாழ்த்தினால் தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரம் முற்றிலும் பறிபோகும்.

எனவே, மேகேதாட்டுவில் அணை கட்டும் முயற்சியை முறியடிக்க முதல்வர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# “மகளிருக்கு விரைவில் ரூ.2,500 உரிமைத் தொகை”

## அமைச்சர் ஜெகதீஸ்வரி தகவல்



விருதுநகர்: "மகளிருக்கு மாதம்தோறும் வழங்கும் உரிமைத் தொகையை ரூ.2,500 உயர்த்தி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் அது வழங்கப்படும்" என்று சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி தெரிவித்தார். விருதுநகர் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் விழா விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுலவகத்தில் இன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா தலைமை வகித்தார். எம்எல்ஏக்கள் செல்வம் (விருதுநகர்), கார்த்திக் (ஸ்ரீவில்லிபுத்தூர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா, சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு 3,428 பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினர்.

அமைச்சர் கீர்த்தனா பேசுகையில், "விருதுநகர் மாவட்டத்தில் வெற்றிபெற்றுள்ள நாங்கள் நால்வரும் இந்தமாவட்டத்தின் 4 தூண்களாக இருந்து மக்கள் பணியாற்றுவோம். மக்களின் கோரிக்கைகள், தேவைகளை பூர்த்தி செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்" என்றார்.

சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி பேசுகையில், "நாங்கள் ஒற்றுமையாகபயணிக்கிறோம். சகோதரி கீர்த்தனாவுக்கும், எனக்கும் எந்த கருத்து வேறுபாடும் இல்லை. நாங்கள் ஒன்றாக இணைந்து மக்கள் பணியாற்றி வருகிறோம். நாங்களும், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களும் மட்டுமின்றி எதிர்க்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் ஒன்றாக இருந்து விருதுநகர் மக்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்ய அனைத்துமுயற்சிகளையும் மேற்கொள்வோம்.

மாதந்தோறும் மகளிருக்கு வழங்கப்படும் உரிமைத் தொகையை ரூ.2,500 ஆக உயர்த்தி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் அது வுழங்கப்படும். அதோடு, 'விஜய் விஜயம்' என்ற ஆப்– ஒன்றையும் கடந்த வாரம் ராஜபாளையத்தில் அறிமுகம் செய்து வைத்தேன். மக்கள் எந்த கோரிக்கையாக இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு நேரில் வரத் தேவையில்லை. இந்த ஆப்– மூலம் தெரிவித்தால் போதும், 24 மணி நேரத்திற்குள் அதற்கான பதில் அளிக்கப்படும். விரைவில் சிவகாசியிலும் மற்ற தொகுதிகளிலும் இந்த சேவை தொடங்கப்படும்." என்று கூறினார்.

அதைத்தொடர்ந்து, விருதுநகர் மாவட்ட விளையாட்டரங்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கிரிக்கெட் உள் விளையாட்டு அரங்கையும் அமைச்சர்கள் திறந்து வைத்தனர். முன்னதாக, சிவகாசி அருகே செங்கமலப்பட்டியில் பட்டாசு வெடி விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு முதல்வர் நிவாரண நிதிக்கான காசோலைகளையும் அமைச்சர்கள் வழங்கி அவர்களுக்கு ஆறுதல் கூறினர்.




# கள்ளக்குறிச்சியில் சிறந்த ரத்தக் கொடையாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவித்த மாவட்ட ஆட்சியர் பத்மஜா

தேசிய தன்னார்வ ரத்ததான தினம் மற்றும் உலக குருதி கொடையாளர்கள் தினத்தை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறந்த ரத்தக் கொடையாளர்களை கௌரவிக்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் பத்மஜா தலைமை வகித்து, தொடர்ந்து தன்னார்வமாக ரத்ததானம் செய்து சமூக நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வரும் சிறந்த ரத்தக் கொடையாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

விழாவில் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலகின் கிளஸ்டர் மாவட்ட திட்ட மேலாளர் நல்லதம்பி வரவேற்புரையாற்றி, பாதுகாப்பான ரத்ததானத்தின் அவசியம், தன்னார்வ ரத்ததானம் உயிர்களைக் காப்பாற்றுவதில் வகிக்கும் முக்கிய பங்கு மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் ரத்ததானத்தில் ஈடுபட வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.

மருத்துவ கண்காணிப்பாளர் பச்சையப்பன், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் பவானி, கள்ளக்குறிச்சி துணை மருத்துவ கண்காணிப்பாளர் பழமலை, இணை இயக்குநர் (நலப்பணிகள்) டாக்டர் மாலினி, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) டாக்டர் சித்திரசேனா மற்றும் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை குருதி வங்கி மருத்துவ அலுவலர் டாக்டர் பரணிதரன் ஆகியோர் சிறப்புரையாற்றி, தன்னார்வ ரத்ததானத்தின் சமூகப் பயன்கள், அவசர சிகிச்சைகளில் ரத்தத்தின் தேவை மற்றும் இளைஞர்கள் அதிகளவில் ரத்ததானம் செய்ய முன்வர வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தினர்.

தொடர்ந்து, பல ஆண்டுகளாக தன்னார்வ அடிப்படையில் தொடர்ந்து ரத்ததானம் செய்து மனிதநேய சேவையில் ஈடுபட்டு வரும் சிறந்த ரத்தக் கொடையாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் பத்மஜா பாராட்டு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார். ரத்ததானம் என்பது உயிர் காக்கும் உன்னதமான மனிதநேய சேவை என்றும், ஒவ்வொருவரும் ஆரோக்கியமான நிலையில் இருக்கும்போது தன்னார்வமாக ரத்ததானம் செய்ய முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

விழாவின் நிறைவில் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை குருதி வங்கி மருத்துவ அலுவலர் டாக்டர் விஜயகுமார் நன்றியுரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மருத்துவர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள், தன்னார்வ அமைப்புகளின் பிரதிநிதிகள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் 70-க்கும் மேற்பட்ட தன்னார்வ ரத்தக் கொடையாளர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.





# தூத்துக்குடி மாநகராட்சி மேயரை சந்தித்த நாட்டுப்படகு மற்றும் பைபர் படகு மீனவர்கள் நலச்சங்க நிர்வாகிகள்; பல்வேறு கோரிக்கைகள் முன்வைப்பு

தூத்துக்குடி மாவட்ட நாட்டுப்படகு மற்றும் பைபர் படகு மீனவர்கள் நலச்சங்கத்தின் புதிய மாவட்ட தலைவராக பொறுப்பேற்றுள்ள வினோஜின், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தாமஸ் (எ) ஆழிபுத்திரன் மற்றும் பாண்டியாபதி பரதர் நலச்சங்கத் தலைவர் இன்னாசி ஆகியோர், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமியை நேரில் சந்தித்தனர்.

அப்போது, மேயருக்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினர், பின்னர் மீனவர்களின் வாழ்வாதாரம், அடிப்படை வசதிகள் மற்றும் மீனவ சமூகத்தின் நலன் தொடர்பான பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கி, அவற்றை விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினர். தொடர்ந்து மீனவர்களின் நலன் கருதி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி உறுதியளித்ததாக சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# திருவிலஞ்சி குமாரசாமி கோவில் பெயர்மாற்றத்தை ரத்து செய்ய வேண்டும்

## இந்து சமய அறநிலைத்துறைக்கு காமராஜர் தேசிய காங்கிரஸ் மனு

தென்காசி மாவட்டம் திருவிலஞ்சி பகுதியில் அமைந்துள்ள பழமையான குமாரசாமி மாவட்டம் திருவிலஞ்சி குமாரசாமி திருக்கோவில் தமிழ்கடவுளான முருகப்பெருமானுக்கான வழிபாடுகள் வழக்கம்போல் நடைபெற நடவடிக்கை எடுக்க



திருக்கோவிலில், முருகப்பெருமானின் பெயர் மற்றும் வழிபாட்டு முறைகள் மாற்றப்பட்டுள்ளதாகக் கூறி, அவற்றை உடனடியாக மீட்டமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி, காமராஜர் தேசிய காங்கிரஸ் சார்பில் இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையரிடம் மனு அளிக்கப்பட்டது.

காமராஜர் தேசிய காங்கிரஸ் மாநில துணைச் செயலாளர் ராம பாண்டி தலைமையில், தூத்துக்குடியில் உள்ள இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் அலுவலகத்தில் மனு அளித்தார்.

மனுவில், தென்காசி முருகப்பெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மிகவும் பழமையான ஆலயமாகும். இந்நிலையில், இந்து சமய அறநிலைத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த ஆலயத்தில், "குமாரசாமி திருக்கோவில்" என்ற பெயர் அகற்றப்பட்டு "வரதராஜ பெருமாள் திருக்கோவில்" என பெயர்ப் பலகை மாற்றப்பட்டதுடன், வழிபாட்டு முறைகளும் மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, உடனடியாக இந்த விவகாரத்தில் தலையிட்டு, ஆலயத்தின் பெயரை மீண்டும் "திருவிலஞ்சி குமாரசாமி திருக்கோவில்" என மாற்றி, வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய மாநில துணைச் செயலாளர் ராம பாண்டி, "தமிழகத்தில் தமிழ் கடவுளான முருகப்பெருமானின் வழிபாடு புறக்கணிக்கப்படுவதாக பக்தர்கள் மத்தியில் கவலை நிலவுகிறது. இந்த விவகாரத்தில் இந்து சமய அறநிலைத்துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், தமிழகம் முழுவதும் உள்ள முருக பக்தர்களை திரட்டி போராட்டத்தில் ஈடுபடுவோம்," என்று தெரிவித்தார்.

# கோவையில் இந்திய மருத்துவச் சங்கம் சார்பில் மருத்துவர்கள் தின விழா




இந்திய மருத்துவச் சங்கத்தின் கோவை கிளை சார்பில் மருத்துவர்கள் தின விழா கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் உள்ள, ஐ.எம்.ஏ அரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு இந்திய மருத்துவச் சங்க கோவை கிளையின் தலைவர் டாக்டர் பி. கோஷல் ராம் தலைமை தாங்கி, வரவேற்புரையாற்றினார். கவுரவச் செயலாளர் டாக்டர் டி. பரமேஸ்வரன் ஆண்டறிக்கை வாசித்தார். விழாவில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரும், கோவை வடக்கு சட்டமன்ற உறுப்பினருமான வி. சம்பத்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மேலும், சிறப்பு அழைப்பாளர்களாக, ஐ.எம்.ஏ தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் டாக்டர் ஏ.கே. ரவிகுமார் , மேற்கு மண்டல துணைத் தலைவர் டாக்டர் சி.பி சண்முகசுந்தரம், முன்னாள் மாநிலச் செயலாளர் டாக்டர் எஸ். கார்த்திக் பிரபு ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

விழாவின் தொடக்கமாக ஐ.எம்.ஏ கோவை நுண்கலை குழுவினரின் சிறப்புப் பண்பாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொடர்ந்து பிரார்த்தனைப் பாடல், மருத்துவர்கள் உறுதிமொழி மற்றும் கொடி ஏந்தி மரியாதை செலுத்துதல் ஆகியவை நடைபெற்றன. விழாவின் முக்கிய நிகழ்வாக மருத்துவர்களின் சேவையை பாராட்டும் வகையில் விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது. அமைச்சர் சம்பத்குமார் 56 மருத்துவர்களுக்கு விருதுகளை வழங்கி கவுரவித்தார். விழா நிறைவில் நிதிச் செயலாளர் டாக்டர் ஆர். பாலமுருகன் நன்றியுரை ஆற்றினார்.

### அழிந்து வரக்கூடிய பாரம்பரியமிக்க கலைகளான ஒயிலாட்டம், காவடியாட்டம், ஜமாப், சிலம்பாட்டம், உள்ளிட்ட கலைகளை மீட்டெடுக்கும் பொருட்டு

# கோவை இருகூர் அடுத்த குரும்பபாளையம் கிராமத்தில் நடைபெற்ற ஒத்திகை நிகழ்ச்சி



அழிந்து வரக்கூடிய பாரம்பரியமிக்க கலைகளான ஒயிலாட்டம், காவடியாட்டம், ஜமாப், சிலம்பாட்டம், உள்ளிட்ட கலைகளை மீட்டெடுக்கும் பொருட்டு கோவை மாவட்டம், பட்டணம் எல் அண்ட் டி பைபாஸ் பகுதியில், செயல்பட்டு வரும் கார்ஸ் 327 நிறுவனம் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் இந்த கலைகளில் ஆர்வம் உள்ளவர்களை தேர்ந்தெடுத்து பயிற்சி அளித்து வருகிறது. ஆர்வம் மட்டும் இருந்தால் போதும் முறையான பயிற்சி அளித்து அவர்களை நம்முடைய பாரம்பரிய கலைகளில் சிறந்த கலைஞர்களாக மாற்றுவது தங்களுடைய லட்சியம், என்றும் தற்சமயம் இளைய தலைமுறைகள் செல்ஃபோன், கம்ப்யூட்டர், போதை பொருட்கள், உள்ளிட்டவைகளுக்கு அடிமையாகி பழங்கால கலைகள் மறைந்து வருகின்றது, எனவே நம்முடைய பாரம்பரிய கலைகளை மீட்டெடுக்கும் பொருட்டு தற்சமயம் இந்த கலைகளை ஊக்குவித்து வருவதாகவும் இதற்கு வேண்டிய உதவிகளை தங்களுடைய நிறுவனம் செய்து தரும் என்றும் தெரிவித்தனர். கோவை இருகூர் அடுத்த குரும்பபாளையம் கிராமத்தில், அந்த கிராம மக்கள் கலந்து கொண்ட ஒயிலாட்டம், காவடி ஆட்டம், ஜமாப் மற்றும் சிலம்பாட்டம், உள்ளிட்ட கலைகளில் பயிற்சி பெற்ற ஏராளமானவர் கலந்துகொண்டு தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தினர். இந்த நிகழ்ச்சிகளை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருநாவலூர் அருகே கூரை வீடு தீப்பற்றி எரிந்து நாசம் குடும்பத்தினர் கோவிலுக்குச் சென்றதால் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்



திருநாவலூர் காவல் எல்லைக்குட்பட்ட சோமாசிப்பாளையம் கிராமத்தில் ஏற்பட்ட எதிர்பாராத தீ விபத்தில் கூரை வீடு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் அனைத்தும் எரிந்து முற்றிலும் சேதமடைந்தன.


கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை திருநாவலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சோமாசிப்பாளையம், மாரியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் பிரகாஷ் (30), த/பெ காசிநாதன். இவர் தனது மனைவி பிரியா, தந்தை காசிநாதன் மற்றும் தாய் தாமரைச்செல்வி ஆகியோருடன் கூரை வீட்டில் வசித்து வருகிறார்.

இன்று மதியம் சுமார் 12:30 மணி அளவில், பிரகாஷின் கூரை வீடு எதிர்பாராதவிதமாக தீப்பற்றி எரியத் தொடங்கியது. சம்பவ நேரத்தில், வீட்டில் உள்ள அனைவரும் கிராமத்து மாரியம்மன் கோவில் 'சாகை வார்த்தல்' திருவிழாவிற்காகக் கோவிலுக்குச் சென்றிருந்தனர்.

வீடு தீப்பற்றி எரிவதைக் கண்ட அக்கம் பக்கத்தினர் உடனடியாக தீயணைப்புத் துறைக்கும் காவல் நிலையத்திற்கும் தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் திருநாவலூர் தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்து தீ மேலும் பரவாமல் அணைத்தனர். இருப்பினும், இந்தவிபத்தில் வீடு மற்றும் வீட்டிலிருந்த அனைத்து உபயோகப் பொருட்களும் முற்றிலும் சேதமடைந்தன. வீட்டில் யாரும் இல்லாததால் அதிர்ஷ்டவசமாக மனித உயிருக்கோ அல்லது உடலுக்கோ எவ்விதச் சேதாரமும் ஏற்படவில்லை. இச்சம்பவம் குறித்து திருநாவலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் (SI)

கோவிந்தன் அவர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

# ஆடித்தபசு தென்காசி நகர் பகுதியில் போக்குவரத்து மாற்றம்



தென்காசி மேல சங்கரன்கோவில் கோமதி அம்மன் சன்னதியில் நடைபெறவிருக்கும் ஆடித்தபசு காட்சியை முன்னிட்டு தென்காசி நகர் பகுதிக்குள் மாலை 4 மணி முதல் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து


தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் தென்காசி போக்குவரத்து காவல் ஆய்வாளர் கொடுத்துள்ள தகவலின் படி.

திருநெல்வேலியில் இருந்து தென்காசி வரும் பேருந்துகள் மற்றும் வாகனங்கள் அனைத்தும் ஆசாத் நகரில் இருந்து பழைய குற்றாலம் இலஞ்சி வழியாக புதிய பேருந்து நிலையம் செல்ல வேண்டும். தென்காசி புதிய பேருந்து நிலையத்திலிருந்து திருநெல்வேலி ஆலங்குளம் செல்லும் பேருந்துகள் அனைத்தும் ஆய்க்குடி சுரண்டை வழியாக செல்ல வேண்டும். குற்றாலம் மின் நகர் பகுதியில் இருந்து வரும் கனரக வாகனங்கள் அனைத்தும் மின் நகர் விலக்கு பகுதியோடு நிறுத்தப்படும். இரு சக்கர வாகனம் கார் போன்ற வாகனங்கள் மதுரம் ஹோட்டல் வரை வந்து புதிய புறவழிச்சாலையை தற்காலிகமாக பயன்படுத்தி கொள்ளலாம்.

அம்பாசமுத்திரம் பகுதியில் இருந்து வரும் வாகனங்கள் பழைய குற்றாலம் இலஞ்சி வழியாக நடுபல்க் சென்று புதிய பேருந்து நிலையம் செல்லலாம் மறு மார்க்கத்திலும் அம்பை கடையம் செல்லும் வாகனங்கள் இதே பாதையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

புதிய புறவழிச்சாலையை ஆசாத் நகர் பகுதியில் இருந்து மேலகரம் மதுரம் ஹோட்டல் வரை அனைத்து வாகனங்களும் பயன்படுத்திக் கொள்ளவும் இன்று ஒரு நாள் மட்டும் அனுமதி. என தென்காசி போக்குவரத்து காவல் ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

# சங்கரப்பேரி சுற்றி உள்ள குடியிருப்புப் பகுதிகளில் மதுபானக்கடை அமைப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள் மனு



தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் தாலுகாவிற்கு உட்பட்ட சங்கரப்பேரி, மார்ட்டினா நகர், ஜி.பி. காலனி, பொன்னம்மாள் நகர், மச்சோடா நகர் மற்றும் தளவாய்புரம் உள்ளிட்ட குடியிருப்புப் பகுதிகளில் டாஸ்மாக் மதுபானக் கடை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அப்பகுதி பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர்.

அந்த மனுவில், மக்கள் அதிக அளவில் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளில் மதுபானக்கடை அமைக்கப்பட்டால், பெண்கள், மாணவ-மாணவிகள், முதியவர்கள் மற்றும் பொதுமக்கள் கடுமையான பாதிப்புகளை சந்திக்க நேரிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, மதுபானம் அருந்துவோர் பொதுச் சாலைகள் மற்றும் பொது இடங்களில் அத்துமீறி நடந்து கொள்வதால் பெண்களின் பாதுகாப்பு பாதிக்கப்படுவதுடன், மாணவர்கள் அச்சத்துடன் பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டிய சூழல் உருவாகும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், முன்மொழியப்பட்டுள்ள மதுபானக் கடை அமைவிடத்தின் அருகில் கல்வி நிறுவனங்கள், குடியிருப்புகள், முதியோர் இல்லம், கோவில்கள் மற்றும் பொதுப் பூங்காக்கள் உள்ளதால், அங்கு மதுபானக் கடை அமைப்பது அரசின் நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளுக்கு முரணானது என்றும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, சங்கரப்பேரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் டாஸ்மாக் மதுபானக் கடை அமைக்கும் திட்டத்தை உடனடியாக கைவிட்டு, மக்கள் வசிப்பிடங்களிலிருந்து விலகிய பொருத்தமான இடத்தில் அமைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இக்கோரிக்கையின் மீது மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால், பெண்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஜனநாயக வழியில் தொடர் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதில் மாறன், ஜெ. ராஜ்சங்கர், சுந்தர், முருகேசன், ஸ்டீவன், பொன் சிங், பிரம்மன் மற்றும் பகுதி பொதுமக்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

# சங்கரன்கோவில் சங்கர நாராயணசாமி கோவிலில் ஆடித்தவசு தேரோட்டம் : திரளான பக்தர்கள் பங்கேற்பு



தமிழகத்தில் பிரசித்தி பெற்ற சிவாலயங்களில் சங்கரன்கோவில் சங்கர நாராயண சுவாமிகோயில் ஒன்றாக உள்ளது. இக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆடித்தபசு திருவிழா வெகுவிமர்சையாக நடைபெறுகிறது. இந்தாண்டு ஆடித்தபசு திருவிழா கடந்த ஜூலை 18ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. விழா நாட்களில் தினமும் அம்பாள்பல்வேறுவாகனங்களில் வீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான தேரோட்டம் 9-ம் திருநாளான நேற்று நடைபெற்றது. இதனை முன்னிட்டு கோமதி அம்பாள் நேற்று காலைதேரில் எழுந்தருளும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து காலை

தேரோட்டம் நடைபெற்றது. தேர் காலை 9.15 மணிக்கு நிலையத்திலிருந்து புறப்பட்டு ரதவீதி வழியாக மீண்டும் 11.15 மணிக்கு நிலையத்தை வந்தடைந்தது. தேரோட்டத்தில் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார், சங்கரன்கோவில் சட்டமன்றஉறுப்பினர்டாக்டர் திலீபன் ஜெய்சங்கர், தென்காசி வடக்கு மாவட்ட தமிழக வெற்றிக்கழகச் செயலாளர் மாரியப்பன்,நகரச்செயலாளர் சரவணன், ஒன்றிய செயலாளர் கனகராஜ், துணைச் செயலாளர் சக்திவேல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் சங்கர மகாலிங்கம்நிர்வாகிஆனந்த், அருண், அதிமுக மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைச் செயலாளர் சிவானந்த், அதிமுக ஒன்றிய செயலாளர்கள் ரவிச்சந்திரன்,செல்வராஜ், டாக்டர் சுப்பாராஜ், தொழிலதிபர்கள் கனகராஜ், திவ்யா ரெங்கன், சங்கரசுப்பிரமணியன், மணிகண்டன், உத்தண்டராமன்,திமுக நிர்வாகி துரைப் பாண்டியன், கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் பழனிச்செல்வம், மதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு மண்டல செயலாளர் வழக்கறிஞர் சங்கரசுப்பு, தலைமை பொதுக்குழு உறுப்பினர் வெங்கடாஜலபதி,மதிமுக ஒன்றிய செயலாளர் சசி முருகன், இந்து முன்னணி கோட்டச் செயலாளர் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் மற்றும் மண்டகப் படிதாரர்கள் செய்திருந்தனர்.

பாதுகாப்பு பணியில் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அசோக்குமார் தலைமையில் கூடுதல் மாவட்ட துணைகண்காணிப்பாளர்கள் ஜூலியஸ் சீசர், சங்கர், துணை காவல் கண்காணிப்பாளர்கள் செங்குட்டுவேலவன், நமச்சிவாயம் மற்றும் போலீசார் செய்திருந்தனர்.

சிகர நிகழ்ச்சியான ஆடித்தவசு திருவிழா 11-ம் திருநாளான நாளை செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறுகிறது. நாளை காலை சுவாமி, அம்பாளுக்கு கும்பாபிஷேகமும், காலை 8:30 மணிக்கு சுவாமி, அம்பாள் சந்திரமௌலீஸ்வரர் மற்றும் உற்சவமூர்த்திக்கு சிறப்பு அபிஷேகமும், காலை 9.30 மணிக்கு ஸ்ரீ கோமதி அம்பாளுக்கு அபிஷேக அலங்காரமும், மதியம் 12 மணிக்கு மேல் ஸ்ரீ கோமதி அம்பாள் தங்கச் சப்பரத்தில்

தெற்குரதவீதியில் உள்ள ஆடித்தவசு மண்டகப்படிக்கு எழுந்தருளும் நிகழ்ச்சியும், மாலை 4.30 மணிக்கு மேல் அருள்மிகு சங்கரநாராயணசாமி தவசு காட்சிக்கு புறப்பாடு நிகழ்ச்சியும், மாலை 6.05 மணிக்கு ஸ்ரீ சங்கரநாராயணசாமி ரிஷப வாகனத்தில் ஸ்ரீ கோமதி அம்பாளுக்கு தவசு காட்சி கொடுத்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இரவு 11 மணிக்கு ஸ்ரீ சங்கரலிங்க சுவாமி யானை வாகனத்தில் புறப்பாடு நிகழ்ச்சியும், இரவு 11:45 மணிக்கு ஸ்ரீ சங்கலிங்க சுவாமி யானை வாகனத்தில் ஸ்ரீ கோமதி அம்பாளுக்கு காட்சி கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.




# குற்றாலம் சக்தி ரோட்டரி சங்கம் மற்றும் திருநெல்வேலி காவேரி மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச இதயப் பரிசோதனை முகாம்

குற்றாலம்சக்திரோட்டரி சங்கம் மற்றும் திருநெல்வேலி காவேரி மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச இதயப் பரிசோதனை முகாம்: 150 பேர் பயன்பெற்றனர் தென்காசிஜூலை28குற்றாலம் சக்தி ரோட்டரி சங்கம் மற்றும் திருநெல்வேலி காவேரி மருத்துவமனை ஆகியவை இணைந்து நடத்திய இலவச இதயப் பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு முகாம் இலஞ்சி ராமசுவாமி பிள்ளை மேல்நிலைப் பள்ளியில் சனிக்கிழமை நடைபெற்றது. காலை 9:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை நடைபெற்ற இம்முகாமில், சுற்றியுள்ள பகுதிகளைச்சேர்ந்த 150பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இம்முகாமினை தென்காசி அரசு தலைமை மருத்துவமனை மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் ஆர். ஜெஸ்லின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டுநிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார். பள்ளிச் செயலாளர் திரு. ஐ.சி. சண்முகவேலாயுதம், தலைமை ஆசிரியர் திரு. கே. ஆறுமுகம் மற்றும் மண்டலம் 33-ன் உதவி ஆளுநர் ரோட்டரியன் முருகேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இலஞ்சி அரசு ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர் நசீம் அகமது முகாமினைப் பார்வையிட்டார்.

முகாமில் பங்கேற்ற பொதுமக்களுக்கு சிறப்பு மருத்துவ நிபுணர்களால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 53 பேருக்கு இ.சி.ஜி (ECG) பரிசோதனையும், 30 பேருக்கு எக்கோ (ECHO) பரிசோதனையும் இலவசமாகச் செய்யப்பட்டது. மேலும் மேல்சிகிச்சை தேவைப்படும் 9 நபர்கள் கண்டறியப்பட்டு, தொடர் சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்பட்டனர். இம்முகாமிற்கான ஏற்பாடுகளை குற்றாலம்சக்திரோட்டரி சங்கத் தலைவி ரோட்டரியன் பவானி, செயலாளர் ரோட்டரியன் விஜயலட்சுமி, பொருளாளர் ரோட்டரியன் சரஸ்வதி சம்சு மற்றும் இணைச் செயலாளர் ரோட்டரியன் நஸிஹா ரஹுமான் ஆகியோர் முன்னின்று நடத்தினர். மேலும் சங்க உறுப்பினர்களான ரோட்டரியன்கள் கவிதா முத்தையா, அழகரசி, தஸ்னீம் பாத்திமா, ஜெயந்தி, சங்கீதா, அல்தாஜ் பேகம், சித்திகா, ஸ்னேகாபாரதி, சோமசுந்தரி, கார்த்திகா மற்றும் ராஜி ஆகியோர் முகாம் சிறப்பாக நடைபெறத் தேவையான பணிகளைச் செய்தனர்.

# குழந்தையின் அரிய வகை நோயை குணப்படுத்தி அஹல்யா மருத்துவர்கள் சாதனை




இந்தியாவில் முதன்முறையாக,பிறந்த குழந்தைக்கு அரிய வகை குடல் நீள விரிவாக்க அறுவைசிகிச்சைசெய்து பாலக்காடு அஹல்யா மருத்துவமனைசாதனை படைத்துள்ளது.

கோவை காந்திபுரம் பகுதியில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசிய அஹல்யா மருத்துவமனையை சேர்ந்த மருத்துவர்கள் கூறியதாவது..

பிறந்த சில நாட்களிலேயே தீவிரக் குடல் நோயினால் பாதிக்கப்பட்ட பாலக்காட்டைச் சேர்ந்தகுழந்தைஅமனா, மேல் சிகிச்சைக்காக அஹல்யா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சாதாரண குழந்தைகளுக்குச் சிறுகுடலின் நீளம் 150 முதல் 180 சென்டிமீட்டர் வரை இருக்கும். ஆனால், குழந்தை அமனாவிற்கு வெறும் 15 சென்டிமீட்டர் மட்டுமே குடல் பகுதி இருந்தது கண்டறியப்பட்டது. இதனால் குழந்தைக்கு உணவிலிருந்து ஊட்டச்சத்துக்களை உறிஞ்ச முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டது. இதையடுத்து, குழந்தைகள் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் முத்துலிங்கம், நியோனாடாலஜி துறைத் தலைவர் டாக்டர் பத்மேஷ் வடக்கேப்பாட்டு மற்றும் ஆலோசகர் டாக்டர் ரத்னபிரதீப் ஆகியோர் தலைமையிலான குழுவினர் குழந்தைக்கு தீவிரச் சிகிச்சை அளித்து வந்தனர். முழுமையாக உணவை உட்கொள்ள முடியாத குழந்தைக்கு, மத்திய சிரை வழியாக, திரவ ஊட்டச்சத்துக்கள் மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. கிருமித் தொற்று ஏற்படாதவாறு, தீவிர பாதுகாப்புடன் கடந்த 11 மாதங்களாக என்ஐசியு, செவிலியர் குழு குழந்தையைப் பராமரித்து உயிருக்குப் போராடி வந்த நிலையில், குழந்தையைக் காப்பாற்றப் பொதுமக்கள் நிதி திரட்டல் மூலமாகப் பெற்றோர் நிதி திரட்டினர். நோயின் தீவிரத்தன்மையைக் கருத்தில் கொண்டு, துபாயில் பணியாற்றும் பிரிட்டிஷ் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பஸ்ஸாம் ஏ. கலீல் மற்றும் கத்தாரில் பணியாற்றும் டாக்டர் சலீம்மம்மூ ஆகிய உலகப்புகழ்பெற்ற குழந்தைகள் அறுவை சிகிச்சை நிபுணர்கள் இந்தியாவிற்கு நேரில் வரவழைக்கப்பட்டனர்.

அவர்களின் தலைமையில், இந்தியாவில் முதன்முறையாக குடல் நீள விரிவாக்க நவீன அறுவை சிகிச்சை வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்டது.

தொடர் மருத்துவப் போராட்டங்கள், பெற்றாரின் அசைக்க முடியாத நம்பிக்கை மற்றும் சர்வதேச மருத்துவக் குழுவின் கூட்டு முயற்சியால் குழந்தை அமனா தற்போது முழுமையாக மீண்டு வந்துள்ளார். மருத்துவ உலகின் இந்த அரிய சாதனைக்கு பல தரப்பிலிருந்தும் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

நம்பிக்கை மற்றும் மருத்துவத் தொழில்நுட்பத்தின் இணைப்பால் சாத்தியமான இந்தச் சாதனை, பல அரிய நோய்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஒரு புதிய விடியலாக அமைந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# அச்சங்குட்டம் ஊராட்சியில் இலவச மருத்துவ முகாம் – 200க்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர்

தென்காசி மாவட்டம் அச்சங்குட்டம் ஊராட்சியில் ழகரம் நன்மை குரல் சங்கம் சார்பில்,பொருநை மருத்துவமனை (திருநெல்வேலி), அகர்வால் கண் மருத்துவமனை, JVN ஆயுஷ் கிளினிக் (சாம்பவர்வடகரை)மற்றும் SKT இயற்கை & யோகா மருத்துவமனை (பாவூர்சத்திரம்)ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், அச்சக்குட்டம் ஊராட்சியில் இலவசமருத்துவமுகாம் சிறப்பாக நடைபெற்றது.

அச்சக்குட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் போதுமான மருத்துவவசதிகள் இல்லாததால், பொதுமக்களின் நலனை முன்னிறுத்தி இந்த இலவச மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.



இம்முகாமில் 200-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பொதுவான உடல்நலப் பரிசோதனைகள்,கண் பரிசோதனைகள்,ஆயுஷ் மருத்துவ ஆலோசனைகள், இயற்கை மற்றும் யோகா மருத்துவ ஆலோசனைகள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ சேவைகளை இலவசமாக பெற்று பயனடைந்தனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ழகரம் நன்மை குரல் சங்கத்தின் தலைவர் திரு.R.நாராயணன் மற்றும் துணைத்தலைவர் திரு. M. கணேஷ் ஆகியோர்,மருத்துவ சேவை எளிதில் கிடைக்காத பகுதிகளில் இதுபோன்ற சமூக நலப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தனர்.

இந்த மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய *பொருநை மருத்துவமனை (திருநெல்வேலி),அகர்வால் கண் மருத்துவமனை, JVN ஆயுஷ் கிளினிக் (சாம்பவர் வடகரை),SKT இயற்கை & யோகா மருத்துவமனை (பாவூர்சத்திரம்)ஆகிய மருத்துவமனைகளின் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள், அச்சக்குட்டம் ஊராட்சி நிர்வாகம், நன்கொடையாளர்கள், தன்னார்வலர்கள், **ழகரம் நன்மை குரல் சங்கத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயனடைந்த பொதுமக்கள் அனைவருக்கும் சங்கம் சார்பில் மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டன.

# பொள்ளாச்சியில் நடைபெறும் கோழிப்பண்ணை சார்ந்த கண்காட்சி




கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் உள்ள என்.ஜி.எம் கல்லூரியில் வரும் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில், ஒருங்கிணைந்த ஸ்டார்ட் அப் மாநாடு மற்றும் கோழிப்பண்ணை கண்காட்சி 2026 நடைபெற உள்ளது.

கோவைபந்தயசாலையில், உள்ள தனியார் அரங்கில் இன்றுஸ்டார்ட் அப் மாநாடு மற்றும் கோழிப்பண்ணை கண்காட்சி ஒருங்கிணைப்பாளர்களான, ரோட்டேரியன் ராம்ஜி ராகவன், டாக்டர் தியாகு, ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் உள்ள என்.ஜி.எம் கல்லூரியில் வரும் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில், ஒருங்கிணைந்த ஸ்டார்ட் அப் மாநாடு மற்றும் கோழிப்பண்ணை கண்காட்சி 2026 நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், தொழில் முனைவோரை உருவாக்குதல், நவீன கோழிப்பண்ணை தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதில், மற்றும் வேளாண்மை சார்ந்த ஸ்டார்ட் அப் நிறுவனங்களை ஊக்குவிப்பதாகும் என தெரிவித்தனர். பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம், மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த இளைஞர்கள், விவசாயிகள், தொழில் முனைவோர், மற்றும் கோழிப்பண்ணைத் துறையினருக்கு பயனளிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும், கிராமப்புற வாழ்வாதார மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கத்தில், கோழிப்பண்ணைத் துறையின் முக்கிய பங்களிப்பை முன்னிறுத்தும் இந்த கண்காட்சி புதிய தொழில் முனைவோர் விவசாயிகள் மற்றும் தொழில் சார்ந்த நிறுவனங்களை ஒரே தளத்தின் கீழ் இணைக்கும் சிறந்தவாய்ப்பாகஅமையும் என்று தெரிவித்தனர். இதில் நவீன தீவன உற்பத்தியாளர்கள், கோழிப்பண்ணை உபகரண உற்பத்தியாளர்கள், கால்நடை மருத்துவ சேவை நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், மற்றும் அதன்சார் தொடர்புடைய தொழில் நிறுவனங்கள், பங்கேற்க உள்ளது எனவும், இக்கண்காட்சியில் சுமார் 40 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது,கண்காட்சியுடன் இணைந்து, சிறப்பு நிபுணர்களின் உரையாடல்கள், கலந்துரையாடல்கள், அமர்வுகள், வாங்குபவ ர்கள் மற்றும் விற்பனையாளர் சந்திப்பு, உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளது. இக்கண்காட்சி அரங்குகளை கண்காட்சியின் தலைவரும் கே.சி.டி தலைவருமான டாக்டர் கிருஷ்ணராஜ் வானவராயர் திறந்து வைக்க உள்ளதாகவும், சாந்தி பீட்ஸ் நிர்வாக இயக்குனர் லட்சுமணன், சுவாதி ஹேட்சரீஸ் நிர்வாக இயக்குனர் சின்னச்சாமி, உள்ளிட்ட பலர் இந்த கண்காட்சிகள் கலந்து கொள்ள உள்ளதாக தெரிவித்தனர்.

# பட்டமளிப்பு விழாவில் பங்கேற்காதது ஏன்? டிஜிபி மகேஷ்குமார் அகர்வால் விளக்கம்

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் 33வது பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கலந்துகொண்டார். இந்த விழாவில் 37 ஆயிரத்து 877 பேருக்கு பட்டம் வழங்கப்படுகிறது. விழாவில் 871 பேருக்கு கவர்னர் அர்லேகர் நேரடியாக பட்டங்களை வழங்கினார்.இதனிடையே,தமிழக டிஜிபி மகேஷ்குமார் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் கிரிமினாலஜி




துறையில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற இருந்தார். அவர் இன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்பட்டது.இந்நிலையில், பட்டமளிப்பு விழாவில் டிஜிபி மகேஷ்குமார் பங்கேற்கவில்லை. காவல்துறை ஆலோசனை கூட்டம் மற்றும் அலுவலக பணிச்சுமை காரணமாக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கமுடியவில்லை என்று டிஜிபி தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து 3வது இடத்தில் பாடப்படுவதற்கு கண்டனம் தெரிவித்து உயர் கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன், நெல்லை, கடையம் எம்.எல்.ஏ.க்கள் இந்த விழாவில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிட த்தக்கது.

DHINATH DHALAM Morning Tamil Daily 29.07.2026

# கோவையில் புதிய டி.வி.எஸ். விக்டரி ஷோரூம் திறப்புவிழா

கோவை குனிய முத்தூர் பாலக்காடு மெயின் ரோட்டில் புதிய டி.வி.எஸ். விக்டரி ஷோரூம், இருசக்கர வாகன விற்பனை மையம், உதிரிபாகங்கள்விற்பனைமையம் நிறுவனத்தின் புதிய லேண்ட்மார்க் ஷோரூமாக அமைக்கப்பட்டுள்ள இந்த விற்பனை நிலையத்தின் திறப்பு விழாவில், டி.வி.எஸ். மோட்டார்நிறுவனத்தின் தொடர்ந்து, நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள பணிமனை , உதிரிபாகங்கள் விற்பனை மையத்தை டி.வி.எஸ். மோட்டார் நிறுவனத்தின் விற்பனைப்



மற்றும்நவீனவசதிகளுடன் கூடிய பணிமனை திறப்பு விழா நடைபெற்றது.

இதனை, டி.வி.எஸ். மோட்டார்நிறுவனத்தின் விற்பனைப் பிரிவு பகுதி மேலாளர் வினீத் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். கோவை குனியமுத்தூர் பாலக்காடு மெயின் ரோட்டில் புதிய டி.வி.எஸ். விக்டரி ஷோரூம், இருசக்கர வாகன விற்பனை மையம், உதிரிபாகங்கள் விற்பனை மையம் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய பணிமனை திறப்பு விழா நடைபெற்றது.

டி.வி.எஸ். மோட்டார் விற்பனைப் பிரிவு பகுதி மேலாளர் வினீத் கலந்து கொண்டு ஷோரூமை திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து குத்துவிளக்கு ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் விக்டரி மோட்டார் கார்ப்நிறுவனத்தின்பங்குதாரர்கள், குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள், சினி வினோத்,பயாஸ் அகமது மற்றும்தலைமை செயல் அதிகாரி வினோத் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், கே.வி.பி. ஆட்டோ கார்ப் எல்.எல்.பி. நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முதன்மை டீலர் பி.கனகராஜ் கலந்து கொண்டார். பிரிவு பிராந்திய மேலாளர் எஸ். மதன் திறந்து வைத்தார். முதல் வாகனத்தை வாடிக்கையாளரிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

புதிய ஷோரூமில் டி.வி.எஸ். நிறுவனத்தின் இருசக்கர வாகனங்களின் விற்பனை, உதிரிபாகங்கள் மற்றும் நவீன சேவை வசதிகள் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. திறப்பு விழாவில் பொதுமக்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் இருசக்கர வாகன ஆர்வலர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர் என்பதுகுறிப்பிடத்தக்கது



திருநெல்வேலி மாவட்ட மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிற்கு நேற்று (28.07.2026) வருகைதந்த மாண்புமிகுதமிழ்நாடு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத்அர்லேகர்அவர்களைமனோன்மணியம்சுந்தரனார்பல்கலைக்கழகவிருந்தினர் மாளிகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆனந்த் மோகன், வரவேற்றார்கள். உடன் திருநெல்வேலி மாநகர காவல் ஆணையாளர் தேஷ்முக் சேகர் சஞ்சய், உள்ளார்கள்

# குடும்ப பிரச்சனை காரணமாக திருமணம் முடிந்து 6 மாதத்தில் மனைவியை வெட்டி கொன்ற கணவன்

## கணவன் நீதிமன்றத்தில் சரண்



தென்காசி மாவட்டம் தென்காசி மங்கம்மா சாலை பகுதியில் வசித்து வருபவர் வீரமணி கண்டன்(33) இவர் அப்பகுதியில் இருசக்கர வாகனம் பழுது நீக்கும் வேலைசெய்துவருகிறார். இவருக்குதிருமணம்ஆகி ஆறு மாதம் ஆகிறது. இவரது மனைவி அன்ன லட்சுமி என்றஅபி(23) இவர்களுக்கு திருமணம் ஆகி ஆறு மாதம் ஆகி வந்த நிலையில் குடும்பத்தில் அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் இன்று காலையும் கணவனுக்கும், மனைவிக்கும்பிரச்சனைஏற்பட்டதாககூறப்படுகிறது. இந்த நிலையில் இருவருக்கும் கைகலப்பு ஏற்பட்ட நிலையில்வீட்டில்வைத்திருந்தஅருவாளால்மனைவி அன்னலட்சுமி என்ற அபியை சரமாரியாக மணிகண்டன் வெட்டி அங்கிருந்து சென்று விட்டார்.

பின் காவல்துறை கைது செய்து விடுமோ என்ற அச்சத்தில் தென்காசி நீதிமன்றத்தில் தற்போது சரணடைந்துள்ளார். மேலும் காவல்துறை நீதிமன்ற காவலில் எடுத்து விசாரணை செய்த பின்புதான் இந்த கொலைக்கான காரணம் பற்றி முழுமையான விவரம் தெரியவரும் என காவல்துறை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

பிரேத பரிசோதனைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு உடலை கைப்பற்றி காவல் துறை கொண்டு சென்று உள்ளனர்

திருமணம் முடிந்து 6 மாதத்தில் குடும்ப பிரச்சினை காரணமாக கணவன் மனைவியை வெட்டிக் கொன்ற சம்பவம் தென்காசியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

# போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் சத்தியமங்கலம் டி.எஸ்.பி. முத்தரசு தொடக்கம்

ஈரோடு மாவட்டம் புன்செய்புளியம்பட்டியில் போதைப்பொருள் இல்லாத ஆரோக்கியமானசமுதாயத்தைஉருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, தனியார் அமைப்பின்சார்பில்பிரம்மாண்ட விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடைபெற்றது. இன்றைய தலைமுறையினரிடையே அதிகரித்து வரும் போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த ஓட்டப் போட்டியின் முதன்மை நோக்கமாகும்.



புன்செய்புளியம்பட்டியில் தொடங்கிய இந்த மாரத்தான் போட்டியானது பனையம்பள்ளி வரை சுமார் 6 கிலோமீட்டர் தூரத்திற்கு நடைபெற்றது. இப்போட்டியைச் சத்தியமங்கலம் காவல் துணை கண்காணிப்பாளர் (டி.எஸ்.பி.) முத்தரசு கொடியசைத்து முறைப்படி தொடங்கி வைத்தார். சமூக மாற்றத்திற்கான இந்த நிகழ்வில் முன்பதிவு செய்திருந்த சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என 800-க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் பங்கேற்று ஓடினர். இதில் அமைப்பின் அறக்கட்டளை நிறுவனர் இளங்கோவன், செயலாளர் அன்பு உட்பட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டு நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். 6 கி.மீ. தூரத்தை நிறைவு செய்து வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்குப் பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. போதையற்ற சமூகத்தை வலியுறுத்தி நடத்தப்பட்ட இந்த விழிப்புணர்வு ஓட்டம் அப்பகுதி பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.



# குற்றாலம் சக்தி ரோட்டரி சங்கம் மற்றும் திருநெல்வேலி காவேரி மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச இதயப் பரிசோதனை முகாம்

குற்றாலம்சக்திரோட்டரி சங்கம் மற்றும் திருநெல்வேலி காவேரி மருத்துவமனை ஆகியவை இணைந்து நடத்திய இலவச இதயப் பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு முகாம் இலஞ்சி ராமசுவாமி பிள்ளை மேல்நிலைப் பள்ளியில் சனிக்கிழமை நடைபெற்றது. காலை 9:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை நடைபெற்ற இம்முகாமில், சுற்றியுள்ளபகுதிகளைச் சேர்ந்த150பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இம்முகாமினை தென்காசி அரசு தலைமை மருத்துவமனை மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் ஆர். ஜெஸ்லின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். பள்ளிச்செயலாளர்திரு. ஐ.சி. சண்முகவேலாயுதம், தலைமை ஆசிரியர் திரு. கே. ஆறுமுகம் மற்றும் மண்டலம் 33-ன் உதவி ஆளுநர்ரோட்டரியன் முருகேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இலஞ்சி அரசு ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர் நசீம் அகமது முகாமினைப் பார்வையிட்டார்.

முகாமில் பங்கேற்ற பொதுமக்களுக்கு சிறப்பு மருத்துவ நிபுணர்களால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில்53பேருக்கு இ.சி.ஜி (ECG) பரிசோதனையும், 30 பேருக்கு எக்கோ (ECHO)பரிசோதனையும் இலவசமாகச் செய்யப்பட்டது. மேலும் மேல்சிகிச்சை தேவைப்படும் 9 நபர்கள் கண்டறியப்பட்டு, தொடர் சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்பட்டனர்.

இம்முகாமிற்கான ஏற்பாடுகளை குற்றாலம் சக்தி ரோட்டரி சங்கத் தலைவி ரோட்டரியன் பவானி, செயலாளர் ரோட்டரியன் விஜய லட்சுமி, பொருளாளர் ரோட்டரியன் சரஸ்வதி சம்சு மற்றும் இணைச் செயலாளர் ரோட்டரியன் நஸிஹா ரஹுமான் ஆகியோர் முன்னின்று நடத்தினர்.சங்கஉறுப்பினர்களான ரோட்டரியன்கள் கவிதா முத்தையா,அழகரசி,தஸ்னீம் பாத்திமா, ஜெயந்தி, சங்கீதா, அல்தாஜ் பேகம், சித்திகா, ஸ்னேகாபாரதி, சோமசுந்தரி, கார்த்திகா மற்றும் ராஜி ஆகியோர் முகாம் சிறப்பாக நடைபெறத் தேவையான பணிகளைச் செய்தனர்.

# வள்ளியூர் வியாபாரிகள் சங்கம் 93வது வருடாந்திர மகாசபை கூட்டம் பரிசு வழங்கல் மற்றும் தீர்மானங்கள்



நெல்லை மாவட்டம் வள்ளியூர்வியாபாரிகள் சங்கம் 93-வது வருடாந்திர மகாசபை கூட்டம் சங்க திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்றது. தலைவர்என்.முருகன்தலைமைவகித்தார்.துணைத் தலைவர் வி.ஜீவா வரவேற்புரைஆற்றினார். செயலாளர் ஐ.ஜோவின்பார்ச்சுனேட் ஆண்டு அறிக்கை தாக்கல் செய்தார். பொருளாளர் சி.சுரேஷ் வரவு செலவுஅறிக்கை தாக்கல்செய்தார்.ஆடிட்டர் அறிக்கையை எம்.அசன் மைதீன் வாசித்தார் நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆர்.ஆண்ட்றோமகேஷ் ராஜ். பி.இசக்கியப்பன் வி.எட்வின்பிரைட்.எஸ்.கணேசன். எஸ்.சரவணன்.என்.தங்கவேல்.எம்.மகாராஜன்.பி. மகேஷ்.எம்.காதர்மைதீன்.எம்.பாஸ்கர்.கே. இராஜேந்திரன்.கே.குமாரமுருகேசன்.எஸ். முத்துராஜன்.எம்.முத்துகுமார்.வி.

செலின்.சேதுராமலிங்கம்வாழ்த்துரைவழங்கினார்கள் உதவி செயலாளர்பாலமுருகன்நன்றியுரையாற்றினர். +2,10th முதல் பரிசு இரண்டாம் பரிசுபெற்ற சங்கஉறுப்பினர்களின்குழந்தைகளுக்குபரிசு மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது 1. பெரும்பத்து.மற்றும்திசையன்விளையில்நடைபெற்ற சம்பவம் போல் வள்ளியூரில் நடைபெறாமல் இருக்க பகல் மற்றும் இரவு நேரங்களில் காவல் துறை ரோந்து பணியினை தீவிர படுத்தவேண்டும். 2.வந்தே பாரத் இரயில்வள்ளியூரில்நின்றுசெல்லமத்திய அமைச்சர் மற்றும் எம்.பி ஆகியோர்களை சந்தித்து மனு கொடுக்க முடி செய்யப்பட்டது.3.

வள்ளியூர் முழுவதும் (புறநகர் பகுதி) மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும்

4.சங்கம் சார்பில் வள்ளியூர் பஜாரில் அமைத்து கொடுக்க கண்காணிப்பு கேமாராவை சரி செய்ய காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.




ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வருவாய் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் இசேவை மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (28.07.2026) ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், முத்துகவுண்டன்பாளையம் ஊராட்சி, என்.பி.எஸ். நகர், நாற்றுப்பண்ணையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (28.07.2026) ஆய்வு மேற்கொண்டார்.

# Several trapped, feared dead after Japan earthquake triggers blast in mall




Hours after a 7.1 magnitude earthquake struck Japan on Tuesday, the tremors reportedly triggered a blast at Aeon Mall Kumamoto in Kashima Town.

As per a statement from the retailer, customers have been evacuated, but several are trapped and feared dead.

Local news agency NHK cited fire officials, who stated that part of the second floor of the building collapsed due to the explosion.

"Kashima town, a shopping complex's second floor collapsed, leaving many people trapped inside," the fire department said in a statement, as per AFP.

Police also said earlier they had received reports of what sounded like an explosion at the Aeon Mall outlet in the Kumamoto region.



ஈரோடு மாவட்டம், 46புதூர் ஊராட்சியில் நமக்கு நாமே திட்டம் கீழ் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மையக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (28.07.2026) ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், நஞ்சை ஊத்துக்குளியில் விபிஜிராம்ஜி புதிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் குளம் அமைக்கும் பணியினை நேரில் பார்வையிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (28.07.2026) ஆய்வு மேற்கொண்டார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.